அடையாள இலக்கம்

E

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2017

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி
# இளைஞர் பிரிவு

(15 – 17 வயதுப் பிரிவு)

பரீட்சைத் தாளை வாசிக்க வழங்கப்படும் நேரம்: 10 நிமிடங்கள்
வினாக்களுக்கு பதிலளிக்க வழங்கப்படும் நேரம்: 2 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள்

**அனைத்து வினாக்களுக்குரிய பதில்களும் தமிழில் மட்டுமே எழுதப்படவேண்டும்.**

| பகுதிகள் | வினா வடிவம் | ஒதுக்கப்பட்ட நேரம் (அண்ணளவாக) | புள்ளிகள் | மதிப்பீட்டுப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| பகுதி 1 | கேட்டு பதிலளித்தல் | 30 நிமிடங்கள் | 20 | |
| பகுதி 2 | வாசித்து பதிலளித்தல் - பாகம் அ | 1 மணி 20 நிமிடங்கள் | 20 | |
| | வாசித்து பதிலளித்தல் - பாகம் ஆ | | 15 | |
| பகுதி 3 | கட்டுரை எழுதுதல் | 40 நிமிடங்கள் | 20 | |
| | | **மொத்தப் புள்ளிகள்** | **75** | |

| **மொத்தப் புள்ளிகள்** | |
|---|---|

# மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்:

1. இந்த பரீட்சை தாளில் கேட்கப்பட்ட அனைத்து வினாக்களுக்குரிய பதில்களும் தமிழில் மட்டுமே எழுதப்படவேண்டும்.
2. பதில்கள் யாவும் தரப்பட்ட பரீட்சை தாளில் எழுதப்படவேண்டும்.

## பகுதி 1: கேட்டு பதிலளித்தல் (20 புள்ளிகள்)

3. கேட்டு பதிலளித்தல் பகுதிக்குரிய வினாக்கள் **1 – 4**.
4. இவற்றிற்குரிய உரைப்பகுதிகள் நான்கும் இதே ஒழுங்கில் இடம்பெறும்.
5. நீங்கள் நான்கு உரைப்பகுதிகளையும் ஒவ்வொன்றாகச் செவிமடுப்பீர்கள். ஒவ்வொரு ஒலிப்பதிவும் இரண்டு தடவைகள் ஒலிபரப்பப்படும். முதலாவது, இரண்டாவது ஒலிபரப்புக்கிடையில் ஒரு சிறிய இடைவேளை விடப்படும். இரண்டு தடவைகளும் ஒலிபரப்பு முடிந்தவுடன் அந்த உரைப்பகுதிக்குத் தொடர்பாகக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு பதில் எழுதுக.
6. நீங்கள் எவ்வேளையிலும் குறிப்புகள் எடுக்கலாம்.
7. ஒவ்வொரு உரையாடலின் இறுதியிலும் அந்த உரையாடல் தொடர்பான வினாக்களுக்கு பதிலளிப்பதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் பற்றி அறியத்தரப்படும். அந்த நேரம் முடிந்தவுடன் அடுத்த ஒலிபரப்பு ஆரம்பிக்கும்.
8. பகுதி ஒன்றிற்கு ஒதுக்கப்பட வேண்டிய நேரம் அண்ணளவாக 30 நிமிடங்கள்.

## பகுதி 2: வாசித்து பதிலளித்தல் (மொத்தம் 25 புள்ளிகள்)

9. வாசித்து பதிலளித்தல் பகுதியில் இரண்டு பாகங்கள் உள்ளன.
10. **வாசித்து பதிலளித்தல் - பாகம் அ:** (20 புள்ளிகள்)

    இந்தப் பாகத்துக்குரிய வினாக்கள் **5 – 7.**
11. முதலாவது பாகத்தில் மூன்று விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை வாசித்து ஒவ்வொரு விடயத்தின் கீழும் தரப்பட்ட விடயம் தொடர்பான கேள்விகளுக்கு பதில் எழுதுக.
12. **வாசித்து பதிலளித்தல் - பாகம் ஆ:** (15 புள்ளிகள்)

    இந்தப் பாகத்துக்குரிய வினா இலக்கம் **8.**
13. இரண்டாவது பாகத்தில், தரப்பட்ட விடயம் சம்பந்தமான தகவல்களை உபயோகித்து கேட்கப்பட்ட கேள்விக்கு 150 சொற்களில் பதில் எழுதுக.
14. பகுதி இரண்டிற்கு ஒதுக்கப்படவேண்டிய நேரம் அண்ணளவாக 1 மணி 20 நிமிடங்கள்.

## பகுதி 3: எழுத்து (20 புள்ளிகள்)

15. இந்தப் பாகத்துக்குரிய வினாக்கள் **9 - 11**. இவற்றில் ஒன்றை தெரிவுசெய்து 250 சொற்களுக்கு குறையாமல் பதில் எழுதுக.
16. பகுதி மூன்றிற்கு ஒதுக்கப்பட வேண்டிய நேரம் அண்ணளவாக 40 நிமிடங்கள்.

## பகுதி 1: கேட்டு பதிலளித்தல்

### வினாக்கள் 1 – 4 (20 புள்ளிகள்)

நீங்கள் நான்கு உரைப்பகுதிகளை ஒவ்வொன்றாகச் செவிமடுப்பீர்கள். ஒவ்வொரு ஒலிப்பதிவும் இரண்டு தடவைகள் ஒலிபரப்பப்படும்.

ஒலிப்பதிவுகளை கவனமாகக் கிரகித்து அந்த உரைப்பகுதிக்குத் தொடர்பாகக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு பதில் எழுதுக.

**புள்ளி** | **இந்தப் பகுதியை குறிப்புகள் எடுக்கப் பயன்படுத்தவும்**

## மாதிரி வினா

### உரைப்பகுதி 1

1. (அ) பாட்டியின் விடாமுயற்சியை உரையாடலில் இருந்து விளக்குக. 2

-----------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------

(ஆ) பாட்டி ஏன் இரவில் கண்விழிப்பாள்? 1

-----------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------

## பகுதி 2: வாசித்து பதிலளித்தல் (மொத்தப் புள்ளிகள் 35)

### பாகம் அ: வினாக்கள் 5 - 7 (20 புள்ளிகள்)

## மாதிரி வினா

**5**. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழேயுள்ள கேள்விகளுக்கு பதில் எழுதுக.

### பெண்களின் பங்கு

உலகின் உருவாக்கத்தில் பெண்களின் பங்கு அளப்பரியது. இன்றைய சமுதாயத்தில் பெண்கள் தமக்கான இடத்தைத் தக்கவைப்பதற்கு சற்று கடினமாக உழைக்க வேண்டியிருக்கின்றது. அத்துடன் அவர்கள் தம் துறைசார்ந்த ஆளுமையை வளர்க்க வேண்டியதும் அவசியமாகின்றது. பல துறைகளிலும் தம் காலடித்தடத்தை பதித்துவிட்ட பெண்கள் ஊடகத்துறையிலும் தமக்கான இடத்தை தக்கவைத்துக்கொள்ளத் தவறவில்லை. வேறுதுறைசார் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விட மேலதிகப் பிரச்சினைகளை ஊடகத்துறையிலுள்ள பெண்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

இன்றைய ஊடகத்துறையை எடுத்துக்கொண்டால் எல்லோருக்கும் சமமாகத்தான் பொறுப்புகள் வழங்கப்படுகின்றன. ஆனால் ஒரு சில பொறுப்புகளைப் பெண்கள் ஏற்றுக்கொள்வதில்லை. வெகுதூரங்களுக்குத் தனியாகச் சென்று தங்குவதற்கு எல்லாப் பெண்களும் துணிந்து முன்வருவதில்லை. ஆண்கள் எல்லா நேரத்திலும் பணியாற்றத் தயாராக இருக்கின்ற போது பெண்கள் ஒரு குறிப்பிட்ட நேரம் மாத்திரமே தம்முடைய பணிகளை முன்னெடுக்க முடிகின்றது. ஆண்கள் பெண்களைப் போன்று தொடர்பாடலுக்கோ கலந்தரையாடலுக்கோ தயங்குவதில்லை. இந்நிலையில் தலைமைத்துவப் பொறுப்புக்கள் பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்களும் எழுகின்றன.

அதேவேளை ஆண் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும் சமூகம் பெண் அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்ற கருத்தும் அதிகாரம் கொண்ட பெண்ணை சூர்ப்பனகையாகவோ வில்லியாகவோ காணுகின்ற நிலை இன்னும் முற்றாக மாறவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது. பெண் என்பவள் மென்மையானவள், கீழ்ப்படிந்து நடக்கவேண்டியவள் என்ற கருத்து தவறுதலாக பார்க்கப்படுவதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது. அதிகாரம் என்பது ஆட்களை அடக்குவது அல்ல, துறைசார் அறிவைக் கொண்ட ஒருவர் அதனை செயன்முறைப்படுத்த தெரிந்திருப்பது என்பது உணரப்படவேண்டியது.

ஊடகத்துறையில் பெண்கள் கவர்ச்சிப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டும் உண்டு. ஊடகங்களில் பணியாற்றும் பெண்கள் அழகானவர்களாக இருக்க வேண்டும் என்ற கட்டுக்கோப்புகளையும் தாண்டி அறிவுடையவர்களாக இருக்க வேண்டியதன் அவசியம் உணரப்படவேண்டும். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்தெற்கு என்ற வாதங்களைமீறி வீறுநடை போடும் பாரதி கண்ட புதுமைப் பெண்களுக்கு எத்தகைய சவால்களும் சாதாரணமானவையே.

ஊடகங்களில் பெண்களின் பங்கு மிக முக்கியமானது. ஊடகங்கள் பெண்களின் தனித்துவமான கண்ணோட்டத்தை வெளிப்படுத்த வேண்டும்.

**புள்ளிகள்**

5. (அ) பொறுப்புக்களை பெண்கள் எடுப்பதில் உள்ள சவால்கள் எவை? **3**

---------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------

(ஆ) ஊடகத்துறையில் பெண்கள் எவ்வாறு பார்க்கப்படுகின்றனர்? **2**

---------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------

**பாகம் ஆ: வினா 8 (15 புள்ளிகள்)**

**8.** கீழே தரப்பட்ட தகவலை பயன்படுத்தி கேட்கப்படும் கேள்விக்கு 150 சொற்களில் விடை தருக:

## ஆதரவற்ற முதியோரை அரவணைக்கும் கருணை இல்லம்

தன் இரத்தத்தையே பாலாக மாற்றி அன்பையும் பாசத்தையும் கொட்டி ஊட்டி வளர்க்கப்பட்ட பிள்ளைகள் பிற்காலத்தில் தம் பெற்றோரை சுமையாக நினைத்து ஒதுக்கி விடும் போது, பெற்றோர் தம் சுமைகளை இறக்கி வைக்க நாடும் இடங்களில் கருணை இல்லமும் ஒன்று. அநாதரவாக்கப்படும் முதியவர்களுக்கு அபயம் அளிப்பது தான் வன்னியிலுள்ள கருணை இல்லம் ஆகும். இங்கு ஆண்களும் பெண்களுமாக அறுபது முதியவர்கள் தஞ்சம் அடைந்துள்ளனர். கருணை இல்லத்தில் ஏற்பட்ட இட நெருக்கடியால் 7500 ரூபாய் கொடுத்து ஒரு வாடகை வீட்டில் பெண்பிரிவு இயங்குகிறது. இவர்களில் பொரும்பாலானோர் தமது குடும்பங்களினால் கைவிடப்பட்டவர்கள். வேறு சிலர் நோய்வாய்ப்பட்டிருக்கையில் உறவினர்களால் வைத்தியசாலைகளில் கைவிடப்பட்டவர்கள். புறக்கணிக்கப்படும் எவரும் இன மத மொழி வேறுபாடின்றி இக் கருணை இல்லத்தில் சேர்க்கப்படுகின்றனர். ஆனால் இட நெருக்கடி காரணமாக புதியவர்களைச் சேர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கருணை இல்லத்தின் தலைவி அருட்சகோதரி திரேசா தெரிவிக்கின்றார்.

இக்கருணை இல்லத்தில் சேருவதற்குப் பலர் முயல்கின்ற போதிலும் அவர்களை அனுமதிக்க முடியாத நிலையில் இந்த இல்லம் இருந்து வருகிறது. இரண்டு கோடிக்கும் சற்று கூடுதலான தொகையில் நான்கு மாடிக் கட்டிடமாக நிருமாணிக்கபட இருந்த புதிய கட்டிடம் நிதிப் பற்றாக்குறையினால் நிறுத்தப்பட்டுள்ளது. இக்கட்டிட நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு ஒரு கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கருணை இல்லத்தைப் பராமரிக்கும் அருட்சகோதரிகள் முழுக்க முழுக்க பொது மக்கள், வர்த்தக நிலையங்கள் உவந்தளிக்கும் அன்பளிப்பிலேயே தங்கி இருக்கின்றனர். அவர்களது கட்டிட நிருமாணப் பூர்த்திக்காகவும், அநாதை முதியவர்களின் பராமரிப்புக்காகவும் கருணை உள்ளம் உன்ளவர்கள் முன் வரவேண்டும் என்று கேட்கிறோம்.

நன்றி வீரகேசரி 21-09-2015

8. அவுஸ்திரேலிய ஈழத்தமிழ் சங்கத்தின் இளைஞர் கிளை, இந்த யோக்கியமான முயற்சிக்கு கைகொடுத்து உதவ விரும்புகிறது. நீர் சங்கத்தின் தலைவராக இருக்கின்றீர். எக் காரணங்களுக்காக, எப்படி அவர்களுக்கு உதவ முன் வந்திருக்கிறீர்கள் என்பதை விளக்கி சகோதரி திரேசாவிற்கு பதில் கடிதமொன்றை எழுதுக.

குறிப்புகள் எடுக்க இந்தப் பகுதியைப் பயன்படுத்தவும்

**கேள்வி 8**

பகுதி 2 முடிவு

வெற்றுத்தாள்

## பகுதி 3: எழுத்து வினாக்கள் 9 - 11 (20 புள்ளிகள்)

பகுதி மூன்றிற்கு ஒதுக்ககப்பட வேண்டிய நேரம் அண்ணளவாக 40 நிமிடங்கள்

கீழே தரப்பட்ட மூன்று எழுத்து வடிவங்களில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்கு குறையாமல் பதில் எழுதுக.

| **எழுத்து வகை** | **எழுத்து வடிவம்** |
|---|---|
| சொந்த அனுபவம் | தினக்குறிப்பேடு |
| ஊக்குவிப்பு | கட்டுரை |
| கற்பனை | கதை |

குறிப்புகள் எடுக்க இந்தப் பகுதியைப் பயன்படுத்தவும்

**கேள்வி இலக்கம்:**

பகுதி 3 முடிவு

**வெற்றுத்தாள்**